★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ★ The official organ of the D.P.F.

மலர் 31 சென்னை: மாசி 6உ சனி (18-2-56) ★ ★ வெளியூர்: மாசி 7உ ஞாயிறு (19—2—56) [இதழ் 212

2.26 கோடி பேர்களுக்கு பி.சி.ஜி. ஊசி போடப்பட்டது

புதுடில்லி, பிப். 17—

'கடந்த ஆண்டு இறுதிவரை இந்தியாவில் 2.26 கோடி பேர்களுக்கு பி. சி. ஜி. ஊசி குத்தப்பட்டது' என்று மக்கள் சபையில் சுகாதார மந்திரி ராஜகுமாரி அமிர்தகௌரி தெரிவித்திருக்கிறார்.

இதற்காக மத்திய சர்க்காரும் பல்வேறு மாநில அரசாங்கங்களும் ரூ. 143 87 இலட்சம் செலவிட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

பிப். 20 ஹர்த்தாலை வெற்றிகரமாக நடத்த வேண்டுகோள்

காமராசர் அறிக்கை பரிசீலிக்கப்பட்டது

சர்வ கட்சிக் கூட்டணிக் கமிட்டியின் அறிக்கை

சென்னை, பிப். 18—

சர்வ கட்சிக் கூட்டணி செயற் கமிட்டியின் அவசரக் கூட்டம் இன்று காலை 10 மணிக்குத் தோழர் ம. பொ. சி. அவர்கள் இல்லத்தில் கூடிற்று. கூட்டத்திற்குச் செயற் கமிட்டி உறுப்பினர்கள் தோழர்கள் ம. பொ. சிவஞானம், எஸ். சி. சி. அந்தோணிபிள்ளை, என். வி. நடராசன், ஏ. சுப்பிரமணியம், ப ஜீவானந்தம், ஜி. உமாபதி ஆகியோர் கலந்துகொண்டனர். விசேட அழைப்பின்பேரில் தோழர்கள் அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், கே. விநாயகம், சின்னதுரை ஆகியோர் கலந்துகொண்டனர்.

கமிட்டிக் கூட்டம் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிடுவதாக முடிவு எடுத்தது:—

பிப்ரவரி 20-ந்தேதி ஹர்த்தால் பற்றி முதலமைச்சர் காமராசர் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையை இக் கமிட்டி நன்கு பரிசீலனை செய்தது. மற்றும், தட்சிணப் பிரதேசம் பற்றிப் பத்திரிகை நிருபர்களிடம் முதலமைச்சர் தெரிவித்துள்ள கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன. தட்சிணப் பிரதேச விஷயத்தில் சர்வகட்சிக் கூட்டணி விடுத்த வேண்டுகோளின் விளைவாகத் தமிழ் மக்களிடையே உருவாகிவரும் எதிர்ப்பை முதலமைச்சர் உணர்ந்திருப்பது கண்டு சர்வகட்சிக் கூட்டணி மகிழ்ச்சியடைகிறது.

ஆனால் தட்சிண ராஜ்யத்தை எந்த வடிவத்திலும், எந்தக் காரணத்தை முன்னிட்டும் சென்னை அரசாங்கம் ஏற்காது என்ற உத்திரவாதம் கொடுக்க முடியாத நிலையில் முதலமைச்சர் இருப்பதை இக்கமிட்டி பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறது. அத்துடன், 'சென்னை ராஜ்யம்' என்பதை மாற்றித் 'தமிழ் ராஜ்யம்' என்று பெயரிடுமாறு சர்வ கட்சிக் கூட்டணியினர் வெளியிட்டுள்ள கோரிக்கை பற்றி முதலமைச்சர் மௌனம் சாதிப்பது வியப்பைத் தருகிறது.

இவை ஒருபுறமிருக்க, கூட்டணியின் முக்கிய கோரிக்கையான எல்லைத் தகராறு விஷயத்தில் முதலமைச்சர் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ளாத நிலையில் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். குறிப்பாகத் தகராறிலுள்ள பகுதிகள் விஷயத்தில் எல்லைக் கமிஷன் நியமித்து ஜனநாயக முறையில் பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமென்று இக்கூட்டணி விடுத்த கோரிக்கையை முதலமைச்சர் ஏற்றுக்கொள்ளவில்லை. பரஸ்பரப் பேச்சுவார்த்தைகளின் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாமென்று அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

ஆனால் அதற்கான சூழ்நிலை இல்லையென்பதுடன், இவ்விஷயத்தில் இறுதி முடிவு செய்யவேண்டிய அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் இருக்கிறதென்பதையும், அத்தகைய முடிவைக்கூட மத்திய அரசாங்கம் ஏற்கனவே தெரிவித்திருப்பதையும் இக்கூட்டணி பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறது.

ஆகவே, முதலமைச்சர் விடுத்துள்ள அறிக்கையைக் கண்டு இக்கூட்டணி திருப்தி கொள்வதற்கில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறது.

எனவே, 20-ந் தேதியன்று நாடெங்கும் ஹர்த்தாலை கண்ணியத்துடனும், கட்டுப்பாடுடனும், அமைதியாகவும் நடத்தித் தர வேண்டுமென்றும், பொதுமக்களை மீண்டும் இக்கமிட்டி வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

* *

சர்வ கட்சிக் கூட்டணி வேண்டுகோள்

18—2—56 சனியன்று சென்னையில் கூடிய சர்வகட்சிக் கூட்டணியின் செயற் கமிட்டி திட்டமாக முடிவு செய்ததற்கிணங்க, இரயில் தண்டவாளத்தில் பொதுமக்கள் நிற்கவேண்டாம்; இரயில் சங்கிலியைப் பிடித்து இழுக்கவேண்டாம். இரயிலில் பிரயாணம் செய்யாமலிருக்கும்படி பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

* *

பாதுகாப்புச் செலவு

1956—57-ம் ஆண்டிற்குப் பிரிட்டனின் பாதுகாப்புச் செலவு 154,87,00,000 (155 கோடி) பவுன் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் சர்க்காரால் அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

* *

பொது வேலை நிறுத்தம்

பொதுச்செயலாளர் வேண்டுகோள்

பிப். 20-ம் நாள் தமிழகமெங்கும் நடத்த இருக்கும் பொது வேலை நிறுத்தம், கடையடைப்பு ஆகிய நிகழ்ச்சிகளை அமைதியாகவும், பலாத்காரம் அற்ற வகையிலும், நேரிய முறையிலும் நடத்துவதற்கான தெளிவுரைகளை ஆங்காங்குள்ள தோழர்களிடம் எடுத்துரைத்து வர, நானும், தோழர் என். வி. நடராசன் அவர்களும் பிப். 12-ம் நாளிலிருந்து பிப். 17-ம் நாள் வரையில் மேற்கொண்ட சுற்றுப்பயணம் மிக வெற்றிகரமாகவும், சிறப்பாகவும் நடைபெற்றது.

சுற்றுப் பயணம் வெற்றியடைய ஒத்துழைப்பு தந்த தி. மு. கழகத் தோழர்களுக்கும், பிற சர்வ கட்சித் தோழர்களுக்கும் என் நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

18—2—56-ல் கூடிய சர்வ கட்சிக் கூட்டணியின் செயற் கமிட்டியின் அவசரக் கூட்டத்தில் திட்டவட்டமாக எடுத்த முடிவுக்கிணங்க, அரசாங்க அலுவலக வேலைகளைத் தடை செய்யவோ, இரயில்களை சங்கிலியை இழுத்தோ, தண்டவாளத்தில் நின்றோ நிறுத்த முயற்சிக்கக்கூடாது. இரயிலில் பிரயாணம் செய்யாமல் பொது வேலைநிறுத்தத்துடன் ஒத்துழைக்கும்படி பொதுமக்களை வேண்டிக்கொள்கிறேன்.

சர்க்கார் அடக்குமுறையின் காரணமாகச் சர்வ கட்சித் தோழர்கள் கைதாகும் நிலை ஏற்படுவது எதிர்பார்க்கக் கூடியதே. அத்தகைய சூழ்நிலையில் கண்ணியம், கட்டுப்பாடு, அமைதி துளியும் கெடவிடாமல் பொது வேலைநிறுத்தத்தில் வெற்றிகரமாக ஈடுபடும்படி சர்வ கட்சித் தோழர்களையும், தமிழ்ப் பெருங்குடி மக்களையும் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

"அறிவகம்"
சென்னை - 13
18—2—'56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

* *

பொதுச்செயலாளர் சுற்றுப் பயணம்

பிப் 20-ந் தேதி நடைபெற வேண்டிய 'ஹர்த்தாலை' அமைதியாகவும் வெற்றிகரமாகவும் நடத்துவதற்காக தமிழகமெங்குமுள்ள கழகத் தோழர்களையும், சர்வகட்சிக் கூட்டணியில் சேர்ந்துள்ள கட்சிகளின் தோழர்களையும் சந்தித்து விவரம் அறிந்து விளக்கம்கூற பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர் கண்ணதாசன் ஆகியோர் மேற்கொண்டிருந்த சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு 17—2—56 இரவு 10 மணிக்கு சென்னை வந்து சேர்ந்தனர்.

தடை உத்தரவு நீடிப்பு

சென்னை, பிப். 18—

போலீஸ் கமிஷனரின் முன் அனுமதியில்லாமல், சென்னை நகரில் ஊர்வலமோ அல்லது பொதுக்கூட்டமோ 19-2-56 முதல் 6-3-56 வரை (இரண்டு நாட்களும் உள்ளிட்டு) நடத்தக் கூடாதென்று சென்னை போலீஸ் கமிஷனர் உத்திரவு பிறப்பித்துள்ளார்.

இது பிப்ரவரி 20-ந்தேதி நடைபெறவிருக்கும் ஹர்த்தாலை ஒட்டி பிறப்பித்ததாக அறிவிக்கப்படுகிறது.

* *

'ஹர்த்தால்'

(பொது வேலை நிறுத்தம்)

காந்தியார் விளக்கம்

"அரசாங்கத்தின் செயலைக் கடுமையாகக் கண்டிக்க 'ஹர்த்தாலே' சரியான முறையாகும். தேசிய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க, மாபெரும் பொதுக்கூட்டங்களை விடச் சக்திவாய்ந்த மார்க்கம் இது."

—1919-ல் 'யங் இந்தியா'வில்

* * * * * * * * * * * * * * * * * * *

அறிக்கை

பிப். 20 — பொது வேலை நிறுத்தம் காரணமாக 'நம் நாடு **20-2-56** (வெளியூர் **21-2-56**) இதழ் வெளிவராது; அடுத்த இதழ் **21-2-56** (வெளியூர் **22-2-56**)-ல் வெளிவரும்.

—ஆசிரியர்.

பிப். 20:

சரித்திர முக்கியத்துவம் பெறுகிறது

கொழும்பு, பிப். 16—

இலங்கையில் சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழியாக்கிவிடமேற்கொள்ளப்பட்டிருக்கும் முயற்சிக்கு எதிராக பிப். 20-ந் தேதியன்று இலங்கையின் வடக்கு, கிழக்கு மாநிலங்கள் முழுவதும் கடையடைப்பு, பொதுவேலை நிறுத்தம் நடத்துவதென தமிழர் தலைவர்கள் முடிவு செய்திருக்கின்றனர்.

அண்மையில், 'தமிழ் மொழியும் ஆட்சி மொழியாக வேண்டும்; தமிழுக்கும் சிங்களத்தைப் போலவே சமநிலை தரவேண்டும்,' என்ற கொள்கைமீது, திரு. சுந்தரலிங்கம் என்பார், மீண்டும் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறார். அவர் இந்தப் பொதுவேலை நிறுத்தத்தைத் தனது தொகுதியில் தீவிரமாக நடத்துவதற்காகப் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார் எனத் தெரிகிறது.

இதற்கிடையில், பிப்ரவரி 17-ந் தேதியன்று ஆளும் கட்சியான தேசிய ஐக்கிய கட்சியினர், 'சிங்களத்தை மட்டும் ஆட்சி மொழியாக்குவது' என்று தீர்மானிப்பதற்காக ஆண்டு மாநாடு நடத்துகிறார்கள்.

தாய்த் தமிழக மக்கள், டில்லி சர்க்காரின் அநீதிகளை எதிர்த்து பிப். 20-ந் தேதியன்று பெரும் பொதுவேலை நிறுத்தம் ஒன்றில் ஈடுபடுகிற நேரத்தில்— அதே நாளில், இலங்கைத் தமிழர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது சரித்திர முக்கியத்துவம் பெற்றதாகவே தமிழர்கள் கருதுகின்றனர்.

பிப். 20—சர்வகட்சி ஹர்த்தால் :

'இஷ்டப்பட்டால் (திராவிட) கழக மெம்பர்களும் பங்கு பெறலாம்'

" இஷ்டப்பட்டால் (திராவிட) கழக மெம்பர்கள் பிப். 20-ந் தேதி சர்வகட்சி ஹர்த்தாலில் கலந்துகொள்ளலாம்."

--இவ்வாறு, 5—2—56 அன்று திருச்சி தேவர் ஹாலில் நடைபெற்ற திராவிடர் கழக மாணவர் மாநாட்டில் பேசுகையில் பெரியார் ஈ. வெ. ரா. குறிப்பிட்டிருக்கிறார். —'தினமணி': 8-2-56

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 18-2-'56 சனி

பிப்ரவரி இருபது!

பிப்ரவரி இருபது — இனி எழுதப்பட வேண்டிய தமிழர் வரலாற்றில் முதலிடம் பெற வேண்டிய புனித நாளாகும்.

இலட்சியம், நடைமுறை, அதற்கான அமைப்பு முறை ஆகிய மூன்றிலும் மாறுபட்டு-முரண்பட்டுப் பணியாற்றிவந்த பல்வேறு பொதுப் பணியினரும், அவைகள் அனைத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு, ஒரே ஒரு பிரச்சினைக்காக ஒன்றுபட்டுப் பணிபுரியத் திரண்டுள்ளனர்.

அவர்கள், ஒரு கூட்டாகத் திரளுவதற்குமுன், ஒருவரை ஒருவர் தூற்றிக்கொண்டிருந்தனர்—தாக்கிக் கொண்டிருந்தனர்—ஒருவரை ஒருவர் வீழ்த்தப் பள்ளந் தோண்டிக்கொண்டிருந்தனர். அத்தகையவர், உட்பகையை மறந்து, வேற்றுமையைத் துறந்து, ஒரு பொது அணியில் ஒன்றுபட்டுள்ளனர்.

பல நாள் பிணங்கிக் கிடந்தவர்கள் ஒன்றுபடுவது என்பதும், ஒன்றுபட்டு ஒத்தத் தன்மையில் பணிபுரிய முந்துவது என்பதும், எளிதில் செயல்படக்கூடியதன்று!

குறிப்பிட்ட ஒரு இலட்சியத்தின்மீது கட்டுக்கடங்காத பற்றும், அதை எப்படியும் அடைந்தே தீருவது என்ற உறுதிப்பாடும் இருந்தால் அல்லாது, முரண்பட்டகொள்கைகளுடன் இயங்கிவந்த கட்சிகள் ஒன்றுபடுவது என்பது முடியாது.

பகைபட்ட ஒரு கட்சியை ஒழிக்க, தங்களுக்குள்ளாக பகைபட்டுக் கிடக்கும் பல கட்சிகளும் தற்காலிகமாக ஒன்றுபடுவது இயற்கையேயாகும். அத்தகு இழிதன்மையில் அமைந்துள்ளது அல்ல, உருவாகி உள்ள பல கட்சி கூட்டணி!

மொழிவழி மாகாண அமைப்புக் கருத்தை முதல் முதலாக உருவாக்கியது காங்கிரஸ் கட்சியேயாகும்.

மற்ற கட்சிகள் அக்கருத்தை ஒப்புக்கொண்டு, அதன்வழி நாட்டைத் திருத்தி அமைப்பதை வலியுறுத்தி வந்தன.

ஆட்சிப் பொறுப்பில் உள்ள காங்கிரஸ் கட்சியும், சென்னை சட்டசபையில் அதே கருத்தை வலியுறுத்தித் தீர்மானமும் நிறைவேற்றி இருக்கிறது.

ஆனால், அத்தீர்மானத்தைக் காங்கிரஸ் மேலிடம் ஏற்க மறுத்து, மூலக் கோட்பாடான மொழிவழி அமைப்புக் கருத்தையே பழிக்கவும் ஒழிக்கவும் முன்வந்துவிட்டது.

இப்பச்சோந்திப் போக்கிற்குத் துளியும் தொடர்பற்ற இந்தியத் துணைக்கண்டத்தின் ஐக்கியத்தை ஒரு புகலாகக் கூறுகிறது, காங்கிரஸ் மேலிடம்! அப்பொருந்தாக் கூற்றுக்கு ஒத்து ஊதுகிறது, சென்னைக் காங்கிரஸ்!

எனவே, தத்துவ ரீதியில் பார்க்கும்பொழுது, எந்த ஒரு கொள்கைக்காகப் பல்வேறு கட்சியினரும், தங்கள் உட்பகையை மறந்து கூட்டணியில் திரண்டுள்ளனரோ, அவ்வணியில் காங்கிரசும் ஒன்றுபட்டு இருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

காங்கிரஸ் விட்டுச்சென்ற இடத்திலிருந்து, மொழிவழி அமைப்புக் கருத்தை வெற்றிகரமாக நடைமுறைக்குக் கொண்டுவரும் பொறுப்பான பெரும் பணியினை மற்ற கட்சிகள் ஏற்றுக் கொண்டுள்ளன. எனவே, மற்ற கட்சிகளால் உருவாக்கப்பட்டுள்ள கூட்டணி, காங்கிரஸ் எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததல்ல என்பது உறுதியாகிறது.

'மொழிவழியில் மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டும்.'

முப்பது ஆண்டுகளாக காங்கிரஸ் இக்கோட்பாட்டை மக்களிடை பரப்பி வந்தது. இன்று அதைக் கைவிட்டு, வேறு ஏற்பாட்டை மக்கள்மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப் பார்க்கிறது.

அதாவது, ஒரே மொழி மாகாண அமைப்பு என்ற கோட்பாட்டிற்கு முரண்பாடான இரு மொழி அல்லது பல மொழி மாகாண அமைப்புத் தத்துவத்தை, வலுவில் மக்கள்மீது திணிக்கக் காங்கிரஸ் மேலிடம் தீவிரம் காட்டுகிறது.

'தட்சிணப் பிரதேசம் அமைப்பது என்ற கருத்தும் முயற்சியும் அறவே அகற்றப்பட வேண்டும்.'

இக்கோரிக்கை வெற்றி பெற்றாக வேண்டும். இதில் வெற்றி காணும் முயற்சியினை கூட்டணி மேற்கொண்டு இருக்கிறது.

'தமிழகத்தோடு சேர்க்கப்படாமலிருக்கும் தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கோச்சிச் சித்தூர், பாலக்காடு முதலிய தாலுகாவிலுள்ள தமிழ்ப் பகுதிகளும், வடக்கே சித்தூர் மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பகுதிகளும் புதிய தமிழ் மாநிலத்தோடு இணைக்கப்பட வேண்டும்.'

'சென்னை மாநிலத்திற்கு 'தமிழ் நாடு' என்று பெயரிடப் படவேண்டும்.'

ஒரே மொழியை அடிப்படையாகக்கொண்டு மாகாணங்களைத் திருத்தி அமைப்பது என்ற, முப்பதாண்டு காலமாக வற்புறுத்தப்பட்டு வந்த முன்னாள் காங்கிரசின் மூலக் கோட்பாடு வெற்றி பெற்றுலன்றி, அதைத் தொடர்ந்து செய்து முடிக்கவேண்டிய மற்ற பிரச்சினைகள் எழுவதற்கே நியாயம் கிடையாது.

மொழிவழியில் மாகாணங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்ற மூல கோரிக்கையை, மீண்டும் மேற்கொள்ள காங்கிரஸ் மேலிடத்தார் முன்வரவேண்டும்.

அதைச்செய்ய காங்கிரஸ் மேலிடத்தை, சென்னை காங்கிரசும் அமைச்சர் குழுவும் தூண்டவேண்டும்.

வேறுவழியற்றநிலையில் காங்கிரஸ் மேலிடத்திற்குக் கட்டுப்பட்டு, மொழிவழி கோரிக்கையை உதறித் தள்ளவேண்டிய கட்டாயம் சென்னை காங்கிரசிற்கு ஏற்பட்டு விட்டது.

தமிழ் மக்களின் மன நிலையை எடுத்துக் காட்டி, மீண்டும் ஒரே மொழி அமைப்புக் கோரிக்கைக்குத் திரும்பிச் செல்ல காங்கிரஸ் மேலிடத்தைத் தூண்ட வேண்டும்.

அதற்கு பிப்ரவரி இருபது பொதுவேலை நிறுத்தம் ஒரு உயர்ந்த சாதனமாகும்.

எனவே, பொது வேலைநிறுத்தம் சென்னை காங்கிரசிற்கு எதிராகச் செய்யப்படுவதல்ல.

காங்கிரஸ் அமைச்சர் குழுவை வீழ்த்துவதற்காகவும் மேற்கொள்ளப்படுவதும் அல்ல.

காங்கிரஸ் மேலிடம் மறந்துள்ளதை நினைவுபடுத்துவதற்கும், நல்வழிபடுத்தித் திருத்துவதற்குமே, பிப்ரவரி இருபது பொது வேலைநிறுத்தம்.

நீதி வழங்கும்படி, காங்கிரஸ் மேலிடத்தாரிடம் வாதிட்டு வெற்றிபெற, பொது வேலைநிறுத்தத்தைக் காங்கிரஸ் ஆளவந்தார்கள் ஒரு சிறந்த காரணமாகக் கொள்ளவேண்டும்.

எனவே, பொது வேலைநிறுத்தம் நூற்றுக்கு நூறு வெற்றிகரமாக முடிவதில், சர்வகட்சிக் கூட்டணிக்கு உள்ள பொறுப்பையும் கடமையையும்விட, காங்கிரஸ் கட்சியினருக்கும் ஆளவந்தார்களுக்கும் அதிகமுண்டு.

எனவே, உண்மையான காங்கிரஸ் ஊழியர்கள் பொது வேலைநிறுத்த வெற்றிக்கு மனமுவந்து ஒத்துழைக்க வேண்டும்.

பொது வேலைநிறுத்த வெற்றி காங்கிரஸ் கோட்பாடான மொழி வழி தத்துவத்திற்கு ஏற்படும் மகத்தான வெற்றியாகும்.

அதிகாரத்தால் கொடுத்த வாக்குறுதியை மறக்கவும், மீறவும் துணிவு கொண்டுள்ள காங்கிரஸ் தலைவர்களுக்கு, அறிவுச் சுடர் கொளுத்தி நல்வழிபடுத்தவேண்டிய கடமை உண்மையான காங்கிரஸ் ஊழியர்களுடையதாகும். அதை, அவர்கள் மட்டுமே தனித்து நின்று செய்வது என்பது முடியாது.

கூட்டணியின் முயற்சி—பிப்ரவரி இருபது பொது வேலை நிறுத்தம் — அதற்கு ஏற்ற ஒரு வாய்ப்பு ஆகும்.

காங்கிரஸ் ஊழியர்களும் பங்கு கொள்ளவேண்டும்.

சைக்கிள் பந்தயத்தில் சென்னைத் தோழர் வெற்றி

பம்பாய், பிப் 15—

தேசிய 'சைக்கிள் சாம்பியன் ஷிப்' போட்டியை ஒட்டி, இன்று இங்கு நடைபெற்ற 106 மைல் வேக சைக்கிள் பந்தயத்தில், சென்னையைச் சேர்ந்த தோழர் எம். மோகன் முதன்மையாக வந்து வெற்றி பெற்றார்.

மொழிவழி மாநில அமைப்பு பற்றி பேச்சுமூச்சில்லை

'தட்சிணப் பிரதேசம்' இப்போது கிடையாதாம்!

பொது வேலைநிறுத்தம் அவசியமற்றதாம்—விரும்பத்தகாததாம்

காமராசர் துரோகம் உச்சமாகிறது!

சென்னை, பிப். 16—

"'தட்சிணப் பிரதேசம்' அமைப்பது என்ற கருத்தை அறவே கைவிடவேண்டும்.

" மொழிவழி மாநிலம் அமைக்கவேண்டும்.

" தமிழக எல்லையோரத்தில் உள்ள தமிழ்ப் பகுதிகளைத் தாய்த் தமிழகத்துடன் சேர்க்க ஒரு எல்லைக் குழு நியமித்து, ஜனநாயக வழியில் சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டும்.

" 'சென்னை ராஜ்யம்' என்ற பெயர், 'தமிழ் நாடு' என்று மாற்றப்படவேண்டும்.

—என்ற கோரிக்கைகளை முன்னிறுத்தித்தான், சர்வகட்சிக் கூட்டணியினர், பிப். 20-ந் தேதியன்று தமிழகமெங்கணும் பொதுவேலை நிறுத்தம் நடைபெற வேண்டுமென கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், அமிர்தசரசிலிருந்து திரும்பியுள்ள முதன் மந்திரி காமராசர், 'தட்சிணப்பிரதேச'த் திட்டத்தை எதிர்ப்பதற்காக, மட்டுமே சர்வகட்சிக் கூட்டணியினர் வேலை நிறுத்தம் செய்யக் கோருவதாக மக்கள் கருதவேண்டும் என்ற கெடு நினைப்பால், 'தட்சிணப் பிரதேசம்' என்ற திட்டம் உருப்பெறவில்லை; மக்கள் கருத்து தெரிந்த பின்னரே தட்சிணப் பிரதேசத் திட்டம் பற்றி முடிவு மேற்கொள்ளப்படும்; எனவே, ஹர்த்தால் வேண்டாம்—என்று பேசியிருக்கிறார்.

'தட்சிணப் பிரதேசத் திட்டத்தை எதிர்க்க மட்டுமல்ல—சர்வகட்சி கூட்டணியின் முயற்சி,' என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

"தேவிகுளம—பீர்மேடு முதலிய திரு—கொச்சியில் உள்ள தமிழ் வட்டங்கள் அனைத்தும் மொழி வழியாகத் தமிழகத்துடன் இணையவேண்டும்; 'தமிழ் நாடு' என்று சென்னையின் பெயர் மாறவேண்டும" — என்பன போன்ற கோரிக்கைகளை, மக்கள் கண்களிலிருந்து மறைத்துவிட காமராசர் வீண்முயற்சி செய்கிறார்.

'தட்சிணப் பிரதேச'த் திட்டத்திற்காக மட்டுமே கூட்டணியின் எதிர்ப்பு—என்று எண்ணும் பேதைகள் நிச்சயமாக நாட்டில் இல்லை. காமராசர், மக்களைப் பேதைகளாக்கிவிடக் கனவு காண்கிறார்! மக்களின் கவனத்தைத் திசை திருப்ப வீண் முயற்சி செய்கிறார்!

காமராசர் தனது அறிக்கையில், 'தேவிகுளம்-பீர்மேடு முதலிய தமிழ்ப் பகுதிகள் தமிழகத்துடன் இணையவேண்டும்' என்ற நியாயமான கோரிக்கையை, 'சிறு எல்லைத் தகராறு' என்று குறிப்பிட்டிருப்பது தமிழ் மக்களின் நியாய உள்ளத்தைப் புண்படுத்துவது என்று மட்டுமின்றி, தனக்குள்ள பொறுப்

(4-ம் பக்கம் பார்க்க)

சர்வகட்சி பொதுக்கூட்டம்

19-2-1956 மாலை 6 மணிக்கு

சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில்

தலைவர் :

பி. டி. இராசன், எம்.எல்.ஏ.

பேச்சாளர்கள் :

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்	கே. விநயகம், எம்.எல்.ஏ.
இரா. நெடுஞ்செழியன்	அந்தோணி பிள்ளை, எம்.எல்.ஏ.
ப. ஜீவானந்தம்	எஸ். சுயம்பிரகாசம், எம்.எல்.ஏ.
சி. என். அண்ணாதுரை	ஏ. இரத்தினம், எம்.எல்.ஏ.
ம. பொ. சிவஞானம்	நல்லசிவம், எம்.எல்.ஏ.
என். எஸ். கிருஷ்ணன்	சின்னதுரை

மற்றும் பலர்

மக்கள் அணிவகுப்பு திரளட்டும்! ★ எழுச்சி முரசு ஒலிக்கட்டும்!

வருக! வருக! அனைவரும் வருக!

காந்தியார் மடியில் வளர்ந்த காங்கிரஸ்

அவரது கொள்கையை மறந்துவிட்ட பரிதாபம்

கோவையில் மனோகரன் விளக்கம்

" கந்தியார் கூறினர்—'மொழிவழி மாநிலம் பிரிக்கப்பட வேண்டியது முக்கியம்; அது, மொழியை அடிப்படையாகக் கொண்டு விளங்கவேண்டும்,'—என்று! காந்தியார் மடியில் வளர்ந்த காங்கிரஸ். அன்றைய தன் கொள்கையையே மறந்து விட்டது கர்பளியுடன் கூடியுள்ள காங்கிரசார் கூறுகின்றனர் — மொழியை—பொருளாதாரத்தை — வரலாற்றை - பூகோளத்தை நாம் அடிப்படையாக கொள்வோம்' —என்று! பல்லவி, அநுபல்லவி, சரணம் பாடுவதுபோல, நேருவிலிருந்து சுப்பிரமணியர்வரை இப்படிக் கூறுகின்றனர்."

இவ்வாறு 12-2-'56 மாலை 6-30 மணியளவில் கோவை சிதம்பரம் பூங்காவில் கூடிய பொதுக்கூட்டத்தில் நாஞ்சில் கி. மனோகரன் கூறினர்.

கூட்டத்திற்கு, தோழர் கோவை. செழியன் தலைமை தாங்கி சில நிமிடங்கள் பேசினர்.

பின்னர் தோழர்கள் சண்முகநாதன், செ. அ ராசமாணிக்கம் ஆகியோர் தேவிகுளம-பீர்மேடு பற்றி சர்வகட்சி அறிக்கையையும் பிப். 20 பொதுவேலை நிறுத்தத்தைப் பற்றியும் பேசினர்.

தோழர் கி. மனோகரன் மேலும் பேசியதாவது —

" ஆந்திர மாநிலத்திற்காக பொட்டி சீராமுலு உண்ணாவிரதம் இருந்தார்; காங்கிரஸ் கூடாரத்தின் கொள்கைத் தூண்களில் ஒன்றான மொழிவழி மாநிலக் கொள்கையை முன்வைத்து அவர், ஆந்திர மாநிலம் கேட்டார்; அதைக் கேட்ட காங்கிரசார் கேலிக்கணை தொடுத்தனர். 'வான் சாதிக்காததை வயிற்றுப் பட்டினி சாதிக்கும்' என்ற வைர நெஞ்சமுடைய சீராமுலுவைப் பார்த்து நேரு கூறினார்—'இந்த உண்ணாவிரதம் அரசாங்கத்தை ஒன்றும செய்யாது' என்று! 57-ம் நாள் சீராமுலு இறுதி மூச்சுவிட்டார். ஆயிரக்கணக்கான ஆந்திரத் தோழர்கள் கிளர்ந்தெழுந்தனர்—தண்டவாளம் பெயர்க்கப்பட்டது; தந்திக்கம்பி அறுபட்டது; தாலுகா, தபால் நிலையங்கள் கொளுத்தப்பட்டன; அடித்து விரட்டப்பட்ட தாலுவினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய, துளை பெற்ற உடலினர் நீங்காத் துயிலில் விழுந்தனர்; அதன் பின்னரே நேரு சம்மதித்தார். ஆந்திர தோழர்கள் பொட்டி சீராமுலு சாக்காட்டால் ஒரு பூக்காட்டை அமைத்தனர்.

" தேவிகுளம் - பீர்மேடு பற்றி நால்வர் குழுவுக்கு என்ன தெரியும்? டில்லி செங்கோட்டையைத் தவிர திராவிட செங்கோட்டை பற்றி அவர்கள் என்ன அறிவார்கள்? தேவிகுளம், பீர்மேடு யாருக்கு? மக்கள் எண்ணிக்கைப்படி அது யாருக்கு? மக்கள் எண்ணப்படி அது யாருக்கு? அங்கு வழங்கும் மொழிப்படி அது யாருக்கு? வரலாற்று ஏடுகள் கூறுவது என்ன? காடுகளை அழித்து கழனிகளை அமைத்து, புகையிலைச் செடி நட்டு, அதைப் பொன் விளையும் பூமியாக்கினவன் யார்? புரியாத பிரச்சினைக்கு அவர்கள் விரிவுரையாளரானதேன்? தேபர், ஏதோ சந்தர்ப்ப வசத்தால் ஆளும் கட்சியான காங்கிரசின் தலைவராகி விட்டார்—காங்கிரஸ் ஜனநாயக முறையிலே ஆட்சி செய்வதானால் ஏன் எதிர்கட்சிகட்கு மதிப்பு கொடுக்கவில்லை?

" தேபரை உறுப்பினராக ஏற்றுக்கொண்ட அவர்கள், ஜனநாயகவாதிகளாக இருந்திருந்தால்—குடியரசுக் கோமான்களாய் இருந்திருந்தால்—அஜாய் கோஷை, லோகியாவை அழைத்திருக்கலாம்! தென்னகத்திலே இரகசியமாகக் கூறுகிறேன் — சி. சு...ப்...பிரமணியத்தையாவது அழைத்திருக்கலாம்! வாலிபத்தின் பொழுது காங்கிரசிற்காகவே பாடுபட்ட வயோதிகர் ஈ. வெ. ரா.-வை அழைத்திருக்கலாம்! ஏன் எதிர்க்கட்சியை சேர்க்கவில்லை? நாங்கள் என்னென்று கூறுவது—தான் தோன்றித்தனமென்று? சர்வாதிகாரத்தனமென்று? ஆணவத்தின் அறுவடை என்று?—தமிழர்களே என்னவென்று எண்ணினீர்கள்!

" குட்டக் குட்டக் குனிந்து கொடுக்கும் கொங்குநாட்டு கோமகன் சுப்பிரமணியங்கள் என்று? பதிகம்பாடி பதவிக்காகப் பல்லிளித்து நிற்கும் பக்தவத்சலங்கள் என்று?"

மேலும், அவர், தேவிகுளம்—பீர்மேடு போன்ற தமிழ்த் தாலுகாக்கள் தமிழகத்துடன் இணைய வேண்டிய அவசியம் பற்றியும், சர்வகட்சித் தலைவர்கள் கூட்டணி பற்றியும் கூறி பிப்ரவரி இருபதாம் நாள், கட்சி பேதம் பாராது சகல கட்சித் தோழர்களும் வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்தி, பிரிக்கப்பட்ட தனயர்களை பெற்ற தாயுடன் பிணைக்கப் பாடுபட வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

காமராசரின் 'மௌன விரத' நிலை!

ஏ. வி. பி. ஆசைத்தம்பி கண்டனம்

4—2—56 மாலை 6 மணிக்கு மாதவரம் தி.மு. கழகச் சார்பில், தேவிகுளம் — பீர்மேடு பற்றிய கொள்கை விளக்கப் பொதுக்கூட்டம், மாதவரம் ஊராண்மைக் கழகத்திற்கு அருகில், தோழர் ஏ ஜெயராஜ் தலைமையில் நடைபெற்றது.

தோழர் இளம்பரிதி அவர்கள், பிப். 20—பொது வேலைநிறுத்தம் குறித்துச் சிறிதுநேரம் பேசினர்.

பின்னர், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

" தமிழகத்தோடு இருக்க வேண்டிய பகுதிகளான தேவிகுளம்—பீர்மேடு, நெய்யாற்றங்கரை முதலிய பகுதிகளைக் கேரளத்தோடு சேர்த்து, 'அநியாயத் தீர்ப்பு' வழங்கியிருக்கின்றனர். இதே போன்று மற்றும் சில மாகாணங்களிலே எல்லைத் தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன.

" பம்பாயைப் பாருங்கள்—எப்பேர்ப்பட்ட கிளர்ச்சி? இரயில்கள் ஓடவில்லை; பஸ்கள் நகரவில்லை; அஞ்சல் நிலையங்கள் கொளுத்தப்பட்டன; தொழிற்சாலைகள் செயலற்றுவிட்டன; பொருள் நஷ்டத்திற்கு அளவே இல்லாதிருந்தது.

" மந்திரிகள் இராஜினாமா செய்தார்கள்; சட்டசபை உறுப்பினர்கள் இராஜினாமாக்களைச் சமர்ப்பித்தனர்.

" ஆனால், தமிழ் நாட்டில், இதுவரை அத்தகைய சம்பவங்களில் ஏதாகிலும் ஒன்றும் நடைபெற்றது கிடையாது; 'அத்தகைய பலாத்காரச் செயல் அறவே கூடாது' என்று நாம் கூறிவருபவர்கள்.

" தேவிகுளம்—பீர்மேடு, செங்கோட்டை பற்றிய நேருவின் அநியாயத் தீர்ப்பு நாட்டு மக்கள் அனைவரையும் கொதிப்படையச் செய்துவிட்டது. எனவே, தாய்த் தமிழகத்தோடு சேரவேண்டிய பகுதிகளைத் தமிழகத்தோடு சேர்த்தாக வேண்டுமென்று தமிழகத்திலுள்ள எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒன்றுகூடி சர்வகட்சி கூட்டணி ஏற்படுத்தியுள்ளனர்.

" தமிழகத்தோடு சேரவேண்டிய பகுதிகளை செழிப்புள்ள பிரதேசங்களைத் 'தமிழருக்கல்லை—கேரள சகோதரர்களுக்குத்தான் தருகிறோம்—இதிலென்ன எதிர்ப்பு?'—என்று சொன்னால், முதலிலிருந்தே தேவிகுளம் - பீர்மேடு பிரச்சினையில் மந்திரிகள் காமராசரும், சுப்பிரமணியமும், பக்தவத்சலமும் ஒரே நிலையில் இருந்தார்களா? ஆளுக்கு ஒரு பேச்சு பேசிக்கொண்டுதானே வந்தார்கள்?

" இன்று தமிழரசுக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும், மற்ற எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்திருக்கின்றன என்றால், அதற்கு இருக்கின்ற கொள்கைகள் சட்டதிட்டங்கள் அப்படி அப்படியே இருந்தாலும், பொதுவாக ஒரு பிரச்சினைக்காக—தேவிகுளம், பீர்மேடு தமிழகத்தோடு சேர்த்தாக வேண்டும்—என்ற பிரச்சினைக்காக ஒன்று சேர்ந்திருக்கிறார்கள்.

" தேவிகுளம், பீர்மேடு ஆகிய பகுதிகள் தமிழருக்குத்தான் சொந்தம்-நேரு பண்டிதன் தீர்ப்பு அநியாயமானது-'மந்திரிகளே ராஜிநாமாச் செய்யுங்கள்' என்று கூறுகிறோம்.

" ஆந்திரா தனி மாநிலமாக அமையவேண்டும்-என்று கேட்டார்கள்; கேட்கவில்லை நேரு பண்டிதர்! அஞ்சல் நிலையங்கள் தீக்கிரையாக்கப் பட்டன; இரயில்கள் கவிழ்க்கப்பட்டன; உடனே ஆந்திரத்தைப் பிரித்தார் நேரு!

" இரண்டு பேருக்கும் சண்டையை உண்டுபண்ணிவிட்டு, 'பிரித்தாளும் சூழ்ச்சியில்தான் நாம் இவர்களை ஆளமுடியும்' என்ற தந்திரத்தில் மத்திய சர்க்கார் இருக்கிறது.

" எந்த நியாயத்தில் தமிழ்ப் பகுதிகளைக் கேரளத்தோடு சேர்த்தார்கள்? பொருளாதாரப் பிரச்சினையிலா?

" தென்னாட்டிலே சுரண்டும் பணத்தை இப்போது, பற்றாக் குறை உள்ள மற்ற மாகாணங்களுக்கு செலவழிக்காமலா இருக்கிறார்கள்? அதேபோல், கேரள நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டால் மற்ற மாகாணங்களில் சென்னையை போன்ற இடங்களில் சுரண்டும் பணத்தைக் கொண்டு, மத்திய சர்க்கார் அதனை ஈடு செய்வதுதானே? அப்படியில்லாமல் ஒருவருடைய இடத்தை மற்றொருவனுக்குக் கொடுத்து விடுவதா நியாயம்?

" கிராமத்திலுள்ள மக்களிடம் இருக்கிற நியாய உணர்ச்சிகூட—'தனக்கு 2 அடி இன்னும் வரவேண்டும்—பக்கத்து வீட்டுக்காரன் வயலில் 4 அடி எனக்குச் சேர வேண்டும்? — என்று பத்திரத்தைக் காட்டி வழக்குக்குச் செல்லும் அறிவுகூட இந்த நாட்டிலே சிலருக்கு இல்லையே! இருக்குமானால், தேவிகுளம்—பீர்மேடு போன்ற பகுதிகளைத் தமிழ்த் தாயகத்தோடு சேர இயலாமல் நேரு அநியாயமாகத் தீர்ப்பு வழங்கியிருக்கக் கூடுமா? 'வாருங்கள், உரிமைக் குரல் எழுப்புவோம்', என்று கூப்பிட்டால், 'நமக்கு என்ன வந்தது? தேவிகுளம் - பீர்மேடு பகுதிகள் யாருக்குப் போனால் என்ன?' என்று கூறுகின்றனரே, அவர்களை என்னவென்று கருதுவது?

" தேவிகுளம்—பீர்மேடு பகுதிகள் தாய்த் தமிழகத்தோடுதான் சேரவேண்டும் என்ற உண்மையை பொதுத் தேர்தல்கள் மூலம் நிருபித்த பின்னர்தானே அந்தப் பகுதிகளை நாம் கேட்கிறோம்; இதைவிட வேறு என்ன வேண்டும்—ஒரு ஜனநாயக நாட்டில் நீதி வழங்க?

காங்கிரஸ் கட்சி இன்றையத் தினம் இந்த நாட்டை ஆளுகிறதென்றால், 'ஜனநாயக' முறையிலா? இல்லை, இல்லை; 'பணநாயக' முறையில் தான் இன்று இந்த நாட்டை காங்கிரஸ் கட்சி ஆண்டு வருகிறது.

" இன்றையத்தினம், காங்கிரஸ் கட்சியிலே—அதிலும் மந்திரி பதவியிலே அமர்ந்திருக்கும் காமராசர்—சுப்பிரமணியம் — பக்தவத்சலம் போன்றோருக்கு எந்தவித உணர்ச்சி இருக்கிறது? அவர்களுக்கு நாட்டுப் பற்று இருக்கிறதென்று எண்ணுகிறீர்கள்?

" அவர்கள் எண்ணுவது எல்லாம் 'நாம் இருக்கும்வரையிலாவது காங்கிரஸ் கட்சி இருக்க வேண்டும்; காங்கிரஸ் கட்சி இருக்கும் வரையிலாவது மந்திரிகளாக இருக்க மாட்டோமா?' என்ற எண்ணத்தைத்தான் கொண்டுள்ளனர்.

" ஏதோ, காங்கிரஸ் என்ற நிறுவனம் ஒன்று இருக்கிறது; அங்கே, கடையிலே இருக்கிற 'குமாஸ்தா' மாதிரி காமராசர் இருக்கிறார், 'கடைக்கு வருகிறோம்—சம்பளம் வாங்குகிறோம்' என்று குமாஸ்தா எண்ணுவதுபோல, 'காமராசர், 'முதன் மந்திரி பதவியிலிருக்கிறோம்—அதற்காகச் சம்பளம் வாங்குகிறோம்' என்று அவர் எண்ணுகிறார் என்றுதான் நாம் கருதுவதைத் தவிர, வேறு என்ன நினைக்க முடியும்?

" உண்மையிலேயே நாட்டுப் பற்று இருக்குமானால்—தமிழகத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் அவருக்கு இருக்குமானால், ஆளும் பொறுப்பிலே இருக்கிற காமராசருக்குத்தானே அது இருக்க வேண்டும்? பொறுப்பு முதலிலே இல்லாதிருந்தாலும், நாமெல்லாம் கூறிய பிறகாவது இருக்க வேண்டாமா?

"கடையிலே இருக்கிற குமாஸ்தாவை, 'சீனி சர்க்கரை மூட்டை என்ன விலை?' என்று கேட்டால், 'ரூ. 101' என்று கூறுவதாக வைத்துக்கொள்வோம்; 'அதற்குக் குறைந்து கொடுக்கமுடியாதா?' என்று கேட்டால், 'சரி, பார்க்கலாம்; முதலாளி வரட்டும், சொல்லுகிறேன்; எத்தனை மூட்டை வேண்டும்?' என்று குமாஸ்தா கூறுவதைப் போலத்தான் நமது முதல் மந்திரியும், 'தேவிகுளம், பீர்மேடு போயிற்றே—அதற்கு என்ன செய்யப்போகிறீர்?' என்று கேட்டால், 'சரி, பார்க்கலாம்; நேருவைக் கேட்கிறேன்; அவர் முடிவைக் கூறுகிறேன்,' என்று கூறுகிறார். அவராக ஒன்றும் செய்ய முடியவில்லையே! கடையிலே இருக்கிற குமாஸ்தாவுக்கும்—நாட்டை ஆளும் முதல் மந்திரி காமராசருக்கும் என்ன வேறுபாடு? எதிலே வேறுபாடு?—என்று கேட்கிறேன்.

" பனம்பள்ளி கோவிந்தமேனனும் காமராசரைப் போல, முதல் மந்திரிதானே? அவர், இவரைப் போலவா எல்லாவற்றையும் 'கோட்டை'விட்டுக்கொண்டு இருக்கிறார்? காரியங்களைச் சாதித்துக்கொண்டு அவர் இருக்கவில்லையா?

" இன்றையத் தினம் தமிழகத்திலே எல்லாக் கட்சிகளும் ஒன்று கூடி கூட்டணி அமைத்து, உரிமையை கேட்கிறார்களே—இப்போதாவது, இங்குள்ள மந்திரிகளுக்கு நாட்டுப்பற்றோ, இனப்பற்றோ ஏற்பட்டிருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் கூற வேண்டி இருக்கிறது.

" சர்க்காருக்கு நல்ல பாடம் கற்பிக்கும் வகையில்தான் இம்மாதம் 20-ந் தேதி பொதுவேலை நிறுத்தம் செய்யப்படும். 20-ந் தேதிக்குள் புத்தியிருந்தால்—'ஜனநாயக நாடு' என்பதாக ஒப்புக்கொண்டால் தேவிகுளம்-பீர்மேடு பகுதிகள் யாருக்குச் சொந்தம் என்று தேர்தல் நடத்தி முடிவுசெய்யலாம் என்று அதிகாரபூர்வமாக பிரகடனம் செய்யட்டும்.'

திருச்சியில்

'நம் நாடு' விற்பனையாளர்

திரு. என். என். சாமி

நியூஸ் ஏஜெண்டு,

c/o நியூ சாரதா கபே,

தெப்பக்குளம், திருச்சி

Bleed through.

சர்வகட்சிக் கூட்டணி அமைப்புகள்

கூட்டணி அமைப்புகளை விரிவாகவும், விளக்கமாகவும் வெளியிட நாம் விழையும்வண்ணம் செயலாற்றுவதற்கு இதழின் அளவும், வெளியிட வேண்டிய செய்திகளின் பெருக்கமும் தடைகளாக உள்ளன. எனவே, கூட்டணி அமைக்கப்பட்டுள்ள இடங்களின் பெயர்களையும், சிலஇடங்களில் தலைவர்களின் பெயர்களையும் மட்டுமே வெளியிட வேண்டிய நிலையில் உள்ளோம். (ஆ—ர்)

சென்னை 3-வது வட்டம்— குழு அமைப்பு
சென்னை 8-வது வட்டம்— டி. எம். முத்துவேல்
சென்னை— திருவல்லிக்கேணி— குழு அமைப்பு
சென்னை 20-வது வட்டம்— குழு அமைப்பு
சென்னை 34-வது வட்டம்— இரா சம்பந்தன்
சென்னை 37-வது வட்டம்— பொ. எழுமலை
பத்தமடை—வி. பாவனாசம்
அய்யம்பேட்டை— எஸ். ஆறுமுகம்
சலகண்டபுரம்—எ. இராமசாமி
தாராபுரம்—எஸ். வி. சக்கரை
ஆலந்தூர்—மு. தங்கவேல்
கொண்டையம்பட்டி— குழு அமைப்பு
கவுல் பஜார்— பி. இராமச்சந்திரன்
திருச்செந்தூர்— ஏ. பி. மணவாளராயன்
தண்டராம்பட்டு—வி. திருமலை
கட்டிமேடு—அ. ப. முகமது
பண்ணுருட்டி—குழு அமைப்பு
கன்னிவாடி—குழு அமைப்பு
இராசபாளையம் —சிவப்பிரகாசம்
கூடலூர்—ப. சொக்கலிங்கம்
மனிநகர்—ஆமதாபாத்— குழு அமைப்பு
காரைக்கால்—வீ. தங்கவேல்
சிதம்பரம்—இரா.கோவிந்தராசன்
எட்டயபுரம்—குழு அமைப்பு
முத்துப்பேட்டை— இ. கே. முகமது-இஸ்மாயில்
நெடுங்குளம்—முத்துக்கண்ணு
குன்னத்தூர்— என். கே. பழனிச்சாமி எம்.எல்.ஏ
செங்காட்டுப்பட்டி— வி. அருணாசலம்
மேலூர்—ஏ. வேலுச்சாமி
பூவிருந்தவல்லி—குழு அமைப்பு
போடிநாய்க்கனூர்— மா. பெரியசாமி
மிஞ்சூர்—நீ. எம். சாமி
திருவெண்ணெய் நல்லூர்— இரா. பெரியதம்பி
ஆரணி—பெத்தய்யா
மாரண்ட அள்ளி— எம். என். அங்கமுத்து
ஆண்டர்சன்பேட்டை— குழு அமைப்பு
காமயகவுண்டன்பட்டி— எஸ். முத்துவீரப்பத்தேவர்
கொளத்தூர்— சொ. ரா. தம்மண்ணரெட்டி
ஆனைமலை—வி. ஏ. அருணாசலம்
திருச்செங்கோடு— டி. எஸ். தங்கவேலு
கடம்பர்கோவில்—குழு அமைப்பு

காரைக்குடி நிலவரம்:

கண்ணதாசன் அறிக்கை

சென்னை, பிப். 18—

பொதுச் செயலாளருடன் சுற்றுப்பயணம் சென்று நிலைமை அறிந்த தோழர் கண்ணதாசன் பின்வரும் அறிக்கையை வெளியிட்டுள்ளார்:—

"காரைக்குடி சர்வகட்சிக் கூட்டணியினரை சந்தித்தேன்; அன்று மாலை எனது இல்லத்தில் சர்வ கட்சிக் கூட்டணியின் கூட்டம் ஒன்று நடத்தினேன். கூட்டணித் தலைவர் சி. முரு. நாராயணன் (செட்டியார்) தலைமை வகித்தார். கம்யூனிஸ்டு, பி. சோ., சோஷலிஸ்டு, தமிழரசுக் கழகம், சமாதானக் குழு, வள்ளுவர் படிப்பகம், சேவாலர் குழு முதலிய நிறுவனங்களைச் சேர்ந்த அனைவரும், தி. மு. க. மாணவர் கிளையினரும், கழகத் தோழர்களும் இதில் பங்கு ஏற்றனர்; தனி அழைப்பின் மேல், கல்லூரி நண்பர்கள் சிலரும் வந்திருந்தனர்; நகரப் பிரமுகர்களும் இதில் கலந்துகொண்டனர்.

சந்தைப்பேட்டையில் தி. மு. க. முன்னுள் செயலாளர் தாக்கப்பட்டது குறித்து கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

19—2—56 அன்று காந்தி சதுக்கத்தில் பெரும் பொதுக்கூட்டம் நடத்துவதென்றும், தோழர்கள் சின்ன அண்ணமலை, கண்ணப்பன், கருப்பைய செட்டியார், மற்றும் பலரோடு நானும் அந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டது. பிப் 20-ந் தேதியன்று ஊர்வலத்தைச் சிறப்புற நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

அன்று கூட்டம் முடிந்தவுடனேயே நானும் கூட்டணி நண்பர்களும் நகர் முழுவதையும் சுற்றி, சுமார் 500-க்கு மேற்பட்ட கடைக்காரர்களைச் சந்தித்து, ஹர்த்தாலில் ஈடுபடக் கோரினேம். காங்கிரஸ், தி. க. கடைக்காரர்கள் உட்பட அனைவரும் மனமுவந்து ஒப்பினர்; ஓட்டல்கள் அனைத்தும் அடைபடும் என உறுதி தரப்பட்டது. பிறகு மூன்று தியேட்டர்காரர்களையும் சந்தித்துக் கோரினேம். தியேட்டர்களை அடைக்க அவர்கள் முடிவு செய்து விட்டார்கள். பிறகு, பொதுக்கூட்ட ஏற்பாடுகளைச் செய்யக் கூறிவிட்டு, கூட்டணி நண்பர்களிடமிருந்து விடைபெற்று வாடகைக் காரில் சேலம் வந்து, பொதுச்செயலாளரின் சுற்றுப்பயணத்தில் கலந்துகொண்டேன். சேலம் மாவட்டம், வ. ஆ. மாவட்டங்களில் சுற்றிவிட்டு, 17-2-56 இரவு சுமார் பதினேரு மணிக்கு சென்னை வந்து சேர்ந்தோம்.

குறிப்பு:—'தினமணி' இதழ்களில், காரைக்குடி வர்த்தகச் சங்கம் எதிர்த்துத் தீர்மானம் போட்டதாக வந்த செய்தி முழுப் பொய்: அம்மாதிரித் தீர்மானமே இல்லை; அத்தனை பேரும் ஒப்பினர். காரைக்குடி உணர்ச்சியின் நிலைக்களனுய் விளங்குகிறது.

மகத்தான ஊர்வலம்

பிப். 20-ந் தேதி ஹர்த்தால்

20—2—56 மாலை 3-மணிக்கு சென்னை ஐலண்ட் மைதானத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிகளின் வழியாய் திருவல்லிக்கேணி கடற்கரையில் முடிவுறும்.

சர்வ கட்சித் தலைவர்களும் அணிவகுத்து வருவர். ஊர்வலத்தில் கலந்துகொள்ள தமிழ்ப் பெருமக்களே, திரண்டு வருக.

—சர்வ கட்சிக் கூட்டணி

'தேசியப் பிரச்சினைகளில் மாணவர் கருத்தறிவிக்க வேண்டும்'

மாணவர் கடமை பற்றி கூட்டணித் தலைவர் விளக்கம்

"மாணவர்கள் அரசியலில் பங்குகொள்வதை எதிர்த்து வந்திருப்பவன் நான்; ஆனுல், இதுபோன்ற தேசிய முக்கியத்துவமுள்ள பிரச்சினைகளில் மாணவர்கள் தங்கள் கருத்தை வெளியிடவேண்டும் என்று விரும்புகிறேன்.

"பிப்ரவரி 20-ந் தேதியன்று கட்டுப்பாடாக, ஒழுங்கான முறையில் தமிழர்கள் நடந்துகொள்ளப்போகிருர்களா என்பதில் தமிழர்களுக்கு ஒரு பெரிய சோதனை காத்திருக்கிறது.

"அன்று, இந்தியாவின் இந்தக் கோடியில் என்ன நடக்கப் போகிறது என்பதில் உலகின் கவனம் பூராவும் திருப்பப்படும்; தமிழர்களின் உன்னத பாரம்பரியமும், கலாச்சாரமும் அவர்கள் நல்ல முறையாக நடந்துகொள்வதற்கு உதவும் என்று நம்புகிறேன்.

"தமிழக வரலாற்றில், பிப்ரவரி 20-ந் தேதி ஒரு முக்கிய தினமாக விளங்கும் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமே இல்லை"

என்று, சர்வகட்சி கூட்டணித் தலைவர் பி. டி. இராசன் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிருர்.

"பிப்ரவரி 20-ந் தேதியன்று, அமைதியாக, ஒழுங்கு தவறுமல் கட்டுப்பாடாகக் கடையடைப்பும், பொதுவேலை நிறுத்தமும் நடைபெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"தட்சிணப் பிரதேச யோசனைக்குத் தங்கள் பலமான எதிர்ப்பையும், எல்லையோர தமிழ்ப் பகுதிகள் சேர்ந்த 'தமிழகம்' அமையவேண்டும் என்பதில் அவர்களுக்குள்ள ஆழ்ந்த விருப்பத்தையும் தமிழ் மக்கள் பிப் 20-ந் தேதி தெரிவிக்கவிருக்கிருர்கள்.

"தமிழர்களின் கோரிக்கைகளை டில்லி சர்க்காருக்கு வலியுறுத்துவதற்கு எல்லா தரப்பு மக்களும் சமாதான முறையில், பொது மக்களுக்கு இடையூறு எதும் ஏற்படாதவண்ணம் 'ஹர்த்தால்' அனுஷ்டிக்கவேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது.

"மேல் குறிப்பிட்ட முறையில் 'தமிழ் நாடு' அமைக்கப்படவேண்டும் என்பது ஒரு தேசிய பிரச்சினையாகும். சென்னை சட்ட சபையில், எல்லாத் தமிழ் உறுப்பினர்களும் இதை வலியுறுத்தி இருக்கிருர்கள். டில்லி சர்க்கார் இதைக் கவனிக்கவில்லை; மாருக, மக்களின் விருப்பத்தை அறிய எவ்வித முயற்சியும் செய்யாமல், தமிழ் நாட்டை இதர மொழி மாநிலங்களுடன் பிணைத்துப் போட முயற்சிக்கிருர்கள். எனவே தான், அவர்களது போக்கைக் கண்டித்து தமிழ் மக்களின் விருப்பத்தை உலகறியச் செய்யவே இந்த பிப்ரவரி 20-ந் தேதி பொது வேலை நிறுத்தம்.

'செயற் குழு' என்ற சொல் உபயோகிக்கப்பட்டதினுல், பிப்ரவரி 20-ந் தேதிய 'ஹர்த்தால்' பலாத்காரத்திற்குக் காரணமாகக்கூடும் என்று தவருன கருத்து ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. 'ஹர்த்தால்' செய்ய ஒருமனதாக முடிவு செய்த கூட்டங்களைக் குறிப்பிடவே தற்காகவே 'செயற் குழு' என்ற சொல் உபயோகிக்கப்பட்டது.

பிப். 20-ந் தேதி தமிழ்நாடெங்கும்

பொதுக் கூட்டங்களில் வாசிக்கப்படுகிற

உறுதி மொழி

★

........மக்கள் அடங்கிய இக்கூட்டம், தட்சிணப் பிரதேச அமைப்பு ஆலோசனையை முழு மூச்சோடு எதிர்ப்பதுடன், மொழிவழி தமிழ் இராஜ்யம் அமைத்தே தீருவதென்றும் உறுதி மேற்கொள்ளுகிறது.

மற்றும், தமிழக எல்லையோரத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு சேர்க்கவும், பிற மொழிப் பகுதிகளை அதனதன் மொழி வழங்கும் இராஜ்யங்களோடு சேர்க்கவும் ஒரு எல்லைக் கமிஷன் நியமித்து ஜனநாயக வழியில் முடிவு செய்யுமாறு மத்திய அரசினரை வற்புறுத்துவதோடு, சென்னை இராஜ்யத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயரிட வேண்டுமென்று கோருகின்றது.

இந்த இலட்சியங்களுக்கு வெற்றி கிடைக்கும் வரை, தமிழ் மக்கள் அனைவரும் சாதி, மத, கட்சி பேதமின்றி ஒன்றுபட்டு உழைப்பதென்று இந்தக் கூட்டம் உறுதி எடுத்துக்கொள்ளுகிறது.

தமிழர் உறுதி மொழி:

1. தட்சிணப் பிரதேச அமைப்பைக் கைவிட்டு, மொழிவழி இராஜ்யம் அமைக்க வேண்டும்.
2. தமிழக எல்லை ஓரத் தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்துடன் இணைக்க வேண்டும்.
3. 'சென்னை இராஜ்யம்' என்ற பெயர் 'தமிழ் நாடு' என்று மாற்றப்பட வேண்டும்.

இதுவே எங்கள் கூட்டணியின் இலட்சியம்

மேலேயுள்ள மூன்று இலட்சியங்களும் வெற்றி பெறும்வரை, தமிழர்களாகிய நாங்கள் ஒருமனப்பட்டு, ஒற்றுமையுடன் அயராது உழைப்போம் என்று, பிப்ரவரி 20 ஆகிய இந்நாளில் உறுதி எடுத்துக்கொள்கிறோம்.

—சர்வ கட்சி கூட்டணி

பிப். 20 வேலைநிறுத்தம்—விளக்கம்

கோவை:

19—2—56 மாலை கோவை சிதம்பரம் பூங்காவில் தோழர் மு. கருணாநிதி, மற்றும் சர்வ கட்சித் தோழர்களும் கலந்து கொள்ளும் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும்.

★

குடந்தை:

செட்டிப் புதுத் தெருவில்

தலைவர்:
கே. கே. நீலமேகம்

பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
டி. கே. சண்முகம்
வானம்பாடி
டி. எஸ். சோமுராவ்
ஏ. சண்முகம்
டி. கே. ரெங்கசாமி

★

காரைக்குடி:

19—2—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
சி. முரு. நாராயணன்

பேசுவோர்:
கண்ணதாசன்
சின்ன அண்ணுமலை
கண்ணப்பன்
கருப்பன்

பிப். 20—பொது வேலைநிறுத்தம்

சென்னையில் அண்ணு விளக்கம்

சென்னை 9-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், 14—2—56 அன்று, எழும்பூர் — ஸ்டான்லி மருத்துவ மனை எதிரில் உள்ள திடலில் தேவிகுளம்—பீர்மேடு குறித்தும், பிப். 20—பொதுவேலை நிறுத்தம் குறித்தும், விளக்குவதற்காக ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். வட்ட நகர சபை உறுப்பினர் தோழர் வி. முனுசாமி தலைமை தாங்கினர்.

தோழர்கள் முகவை ஆர். எஸ். பாண்டியன், இளம்பரிதி, மதியழகன் ஆகியோர் பேசினர்.

இறுதியாக அண்ணு அவர்கள் பொதுவேலை நிறுத்தம் ஏன் என்பதை விளக்கி அரிய தோர் உரை நிகழ்த்தினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. (க.-கி.)

மொழிவழி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத் தனது கையாலாகத்தனத்தினுல் தட்டிக்கழித்தது மட்டுமன்றி, பிறராக நியாயங்களைத் தேடிப் பெற முயற்சிப்பதையும் குலைக்க நினைக்கும் கெடு மதி—குது எண்ணம்—நாட்டுப் பற்றற்ற போக்கு—என்றே தமிழ் மக்கள் கருதுகின்றனர். தமிழர்தம் நலனுக்கு வினைத் தன்ன பேராபத்துகளை—தமிழருக்கு டில்லி இழைத்துள்ள அலப்பற்ற அநீதிகளைத் தங்களது பதவி ஆசையினுல் மூடி மறைக்க நினைக்கும் சென்னை மந்திரி சபையினுடையவும், காங்கிரஸ் தலைவர்களுடையவும் வஞ்சக நெஞ்சகத்தை தமிழர்கள் உணர்ந்திருக்கிருர்கள் என்பதால், பிப். 20-ந் தேதியன்று தமிழ் மக்கள் பொதுவேலை நிறுத்தத்திற்கான ஏற்பாடுகளைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத் தக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.